www.padippakam.com

# இலங்கையில் ஈழம்



தமிழக ஈழ நட்புறவுக் கழகம்

சென்னை

படிப்பகம்

www.padippakam.com

இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணத்தின் ஒரு பகுதி, அதாவது திரு. வன்னியசிங்கம் கூறிய நிலப்பகுதியே. பருத்தித்துறை தொடங்கி பூநகரி வரை. மன்னார் முதல் மட்டக்களப்பு வரை பொத்துவிலும் உள்ளடங்கிய பகுதியே இங்கு ஈழம் எனக்குறிப்பிடப்படுகின்றது.




# தமிழக ஈழ நட்புறவுக் கழகம்

75, ஆழ்வார்பேட்டைத் தெரு
சென்னை-600 018

படிப்பகம்

www.padippakam.com

# இலங்கையில் ஈழம்

## உங்களுக்குத் தெரிந்தது

இலங்கையில் தமிழர்கள் அடிபடுகின்றார்கள், உதைபடுகின்றார்கள், இரத்தம் சிந்துகின்றார்கள் என்று இங்குச் சிலரால் பேசப்படுகின்றது. பத்திரிகைகள் சிலவற்றிலும் எழுதப்படுகின்றது. சில சமயங்களில் சிலரால் கண்டனத் தீர்மானங்கள் போடப்படுகின்றன. ஊர்வலங்களும் நடத்தப்படுகின்றன. இது ஒரு பக்கம். 'இலங்கை "சிலோன்" காரர்கள், அங்கே இப்ப பிரச்சினையாம். அதனால் இங்கு வருகின்றார்கள். இவர்கள் பேசும் தமிழைப் பார்த்தீர்களா? இது சிங்களத் தமிழ், இவர்கள் பேச்சு இப்படித்தான். பர்மாவிலிருந்து வராங்க. அதுபோல இலங்கையும் அகதிகள்' ஒரு மயக்கம். "இங்கிருந்து அங்கே சென்றவர்கள் போன இடத்தில் ஒத்துப்போவதுதானே சரி, இவர்கள் ஏன் பிரச்சினை எழுப்பவேண்டும். உரிமை கேட்கவேண்டும். வாழும் நாட்டிற்கு விசுவாசமாய் வாழத் தெரியவில்லை" இது இன்னொரு பக்கம்.

இப்படியான நோக்குகள், விமர்சனங்கள், இங்கு நிறைய நிகழ்த்தப்படுகின்றன. உங்களுக்குப் புரியவைக்கப்படுகின்றன. ஆனால், உண்மை என்ன? அடிப்படை என்ன? அங்கே நடந்தவை—நடந்து கொண்டிருப்பவை என்ன? இத் தமிழர்கள் யார்? என்பது போன்ற பல கேள்விகளுக்கு உங்களுக்கு விடை தெரிந்தால்தான் அங்குள்ள பிரச்சினையை உங்களால் அணுக முடியும், ஆதரிக்க முடியும்.

## இலங்கை எது?

இப்போது நாம் முதலில், "இலங்கை" என்பது எது? அது எங்கே இருக்கின்றது? அங்குள்ள மக்கள் யார்? தமிழர்கள் எவர்? என்பவற்றைப் பார்ப்போம்.

www.padippakam.com



இந்தியாவுக்குத் தென்கிழக்கே தமிழகத்தைச் சேர்ந்த இராமநாதபுர மாவட்டத்துக்கு அருகே, அதாவது ஏறத்தாழ 18 கல் தொலைவில், நாற்புறமும் கடலால் சூழப்பட்டு, மாங்காய் வடிவினதான தீவாக இருக்கும் நிலப் பரப்பே இலங்கை.

இன்னும் புவியியல் விளக்கமாகச் சொன்னால் 80° தொடக்கம், 82°க்கும் இடைப்பட்ட கிழக்கு நெடுங்கோட்டுக்கும், 6° தொடக்கம் 10° இடைப்பட்ட வடக்கு அகலக் கோட்டுக்கும் இடையே இத்தீவு காணப்படுகின்றது.

இதிகாசத்திலும், இலக்கியத்திலும் குறிப்பாக இராமயணத்தில்-சிலப்பதிகாரத்தில்-குறிப்பிடப்படும் "இலங்கை" இதுதான் என்பது ஆராய்ச்சியாளரின் முடிபு. "சிங்களத் தீவினிற்கோர் பாலம் அமைப்போம்" என்று பாரதியின் பாடலிலும், 'சிங்களஞ்சேர் தென்னாட்டு மக்கள்' என்று பாரதிதாசனின் பாடலிலும் குறிப்பிடப்படும் "சிங்களம்" இந்த இலங்கையேதான்.

270 கல் நீளமும், 140 கல் அகலமும் கொண்டு, மத்தியில் உயர்ந்த குன்றுகளும், மலைகளும் கரையோரம் ஏறத்தாழ சமதரையும் இதன் புவி அமைப்பாகக் காணப்படுகின்றது. இங்கு விளைவிக்கப்படும் தேயிலை உலகப் புகழ் பெற்றது. மற்றும், ரப்பர், கொக்கோ, தென்னை போன்றவையும் பயிரிடப்படுகின்றன. இங்கு "இரத்தினக் கல்" அகழ்ந்தெடுத்தலும் நடைபெறுகின்றது. இவ்விரத்தினங்களும் உலகப் புகழ்பெற்றவை. மற்றும் மீன்பிடித் தொழிலும் நடைபெறுகின்றது.

இங்கு முக்கியமாக இரு மொழி பேசும் மக்கள் வாழ்கின்றார்கள். சிங்களம் பேசுவோர் சிங்களவர் எனவும் தமிழ் பேசுவோர் தமிழர் எனவும் அழைக்கப்படுகின்றனர். ஐரோப்பியக் கலப்பினங்களும் காணப்படுகின்றன. புத்தம், சைவம், கிறித்துவம், இசுலாம் என்னும் நான்குவித மதக் கொள்கைகள் பின்பற்றப்படுகின்றன.

www.padippakam.com



| | | |
|---|---|---|
| மொத்த மக்கள் | — | 1,26,87,077 |
| சிங்களவர் | — | 91,46,679 |
| ஈழவர் (தமிழர்) | — | 34,64,642 |
| பிற இனத்தவர் | — | 75,756 |

இலங்கை 1505-க்குப் பின் மேலை நாட்டவரால் ஆளப்பட்டது. போர்த்துக்கீசியர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என்போரே ஆட்சி செய்தனர். இறுதியில் 4—2 1948இல் ஆங்கிலேயரால் சுதந்திரம் வழங்கப்பட்டது. சுதந்திரத்திற்குப் பின் இங்கு இரு கட்சி ஆட்சிமுறை காணப்படுகின்றது. யு.என்.பி. (United national party)யும், எஸ்.எல்.எப்.பி. (Sri Lanka Freedom Party)யும் மாறி மாறி ஆட்சி செய்கின்றன. இடது சாரி இயக்கங்களும் தேசிய ரீதியில் இங்கு இயங்குகின்றன. மாஸ்கோ சார்பு கம்யூனிஸ்ட் கட்சி, பீகிங் சார்பு கம்யூனிஸ்ட் கட்சி, ட்ரொஸ்கி சார்பு இடது சாரி இயக்கம், 1971இல் ஆயுதக் கிளர்ச்சி செய்த மக்கள் விடுதலை முன்னணி (J. V. P.), இவை தவிர்ந்த பல சிறிய குழுக்களும் கட்சிகளும் காணப்படுகின்றன.

**ஈழம்—ஈழவர்**

இலங்கை என்பது, எங்கே இருக்கின்றது? அது எப்படிப் பட்டது என்பதை, மேற் கூறிய விளக்கங்கள் மூலம் புரிந்திருக்கலாம் என நம்புகின்றோம். இப்போது நாம் எடுத்துக் கொண்ட தலைப்பிற்கேற்ப ஈழம், ஈழவர் பற்றிய அறிமுகத்தை ஆராய்வோம்.

இலங்கையின் வடக்கு, கிழக்கு, மலையகத்தின் ஒரு பகுதி, அதாவது, திரு. வன்னியசிங்கம் கூறிய தமிழ்ப் பகுதியே - பருத்தித் துறைமுதல் பதுளைவரை, மன்னார் முதல் மட்டக்களப்பு வரை பொத்துவிலும் உள்ளடங்கிய பகுதியே இங்கு ஈழம் எனக் குறிப்பிடப்படுகின்றது. இங்கு வாழும் மக்களின் மொழி ஒன்றே. அது தமிழ். ஆனால் பல மதப் பிரிவுகள் இங்கு நடைமுறையில் உள்ளன. சைவம், கிறித்துவம், இசுலாம் என்னும் முப் பெரும் மதக் கொள்கைகளே இம் மக்களை ஆட்கொண்டுள்ளன. கலாச்சாரம், பண்பாடு, தொழில்முறை முதலி

படிப்பகம்

www.padippakam.com



யவற்றில் அவர்களிடை அடிப்படை வேறுபாடு கிடையாது. இம்மக்கள் ஈழவர் என இங்கே குறிப்பிடப்படுகின்றனர்.

## ஈழவரும் வேறுபாடும்

ஈழவரைக் குடியேறிய காலம் காரணமாகவும், பொருளாதார அமைப்புக் காரணமாகவும் இரண்டு பிரிவினராக ஆக்கவேண்டியுள்ளது. ஒன்று; வரையறுக்க முடியாத காலந்தொட்டு அங்கு வாழும் பூர்வீகக் குடிகள். இரண்டு; காலநிர்ணயத்தைக் கொண்ட, இந்தியாவில் இருந்து குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத்தில் இருந்து வெள்ளையரால், கூலிகளாகக் கொண்டு சென்று குடியேற்றப் பட்டவர்கள். இவர்கள் நிலைமைகளை ஆராய்வோம்.

## பூர்வீகக் குடிகள்

இலங்கையின் வடக்கு, கிழக்கு மாநிலத்தில் வாழுபவர் கள் இவர்கள். சொந்த நிலமுள்ளவர்கள், கல்வியறிவு படைந்தவர்கள், வாழ்க்கை முறையில் மத்தியதர வாழ்க்கை வாழ்பவர்கள். 100க்கு 70 வீதம் [illegible] கல்வியும் 45 வதத்திற்கு மேல் (இலங்கை) அரசாங்க உத்தியோகம் உடையவர்களாகவும் காணப்படுகின்றனர். 90%க்கு மேல் நிலமும் வீடும் உடையவர்கள். விதத்தில் குறிப்பிட முடியாவிட்டாலும் குறிப்பிட்ட சிலர் தேசிய முதலாளிகளாகவும் உள்ளவர், கணிசமானோர் வியாபாரி களாய் உள்ளனர். இவர்களது வியாபார நிலையங்கள் ஸ்ரீலங்காவில் (சிங்கள நாடு) அதிகமாகக் காணப்படு கின்றன.

## குடியேற்றப்பட்ட தமிழர்

இவர்கள் இலங்கையின் மத்தியப் பகுதியான மலைநாட் டில் வாழ்கின்றனர். ஆங்கிலேயர்களால் பெருந்தோட்டப் பயிர்ச் செய்வதற்காக (தேயிலை, ரப்பர்) தென் இந்தியாவில் இருந்து கூலிகளாக 1821இல் ஏயாற்றி அழைத்துச் செல்லப் பட்டனர். 1939இல் இந்திய அரசு தடை செய்யும் வரை இவர்களது குடியேற்றம் நடைபெற்றது. இவர்கள் 'இழப்

www.padippakam.com



பதற்கு எதுவும் இல்லாத' வாழ்க்கை நிலையை உடையவர்களாகக் காணப்படுகின்றனர். தனியே உழைப்பை மட்டும் விற்கும், பாட்டாளிவர்க்க நிலையில் வாழ்கின்றார்கள். விகிதத்தில் குறிப்பிடப்பட முடியாத அளவுத் தொகையினர் முன்னேறியவர்களாக, பணம் படைத்தவர்களாகக் காணப்படுகின்றனர். இவர்களைத் தவிர்த்து, வியாபார நோக்கமாகவே குடியேறிய "செட்டிமார்களும்" அங்கு வசதிபடைத்தவர்களாக வாழ்கின்றனர். செட்டிமாரின் நடவடிக்கை "சுரண்டல்" முறையை ஒத்துள்ளது. 100க்கு 95%க்கும் மேல் மலையக மக்கள், கல்வியில்லாதவர்களாய், சொந்த நிலம், வீடு இல்லாதவர்களாய், சுகாதார வசதியற்றவர்களாய், சுருங்கச் சொல்லின் அடிப்படைத் தேவைகள் இல்லாதவர்களாய்க் காணப்படுகின்றனர்.

அப் பூர்விகக் குடிகளான தமிழர்களும், குடியேற்றப்பட்ட இந்தியத் தமிழர்களும், மொழி, மத, கலாச்சாரத்தால், ஒன்றுபட்ட தன்மையுடையோராய்க் காணப்பட்டாலும், உறவு முறை அற்றவர்களாக, தொடர்பில்லாதவர்களாகவே 1972 வரை வாழ்ந்து வந்தனர். ஆனால் 1972க்குப் பின் இவர்கள் உறவு நிலையில் சிறிது சிறிதான மாற்றம் காணப்படுகின்றது.

உறவுமுறை ஏற்படாததற்குக் காரணங்கள்

1. பூர்விகக் குடிகள் வசதி படைத்தவர்களாகக் காணப்பட்டனர்.

2. கல்வியறிவு படைத்தவர்களாக, உத்தியோகஸ்தர்களாக இருந்தனர்.

3. மலை நாட்டில் தோட்டங்கள் சிலவற்றிற்குச் சொந்தக்காரர்களாய் இருந்தனர்.

4. தோட்ட நிர்வாகத்தில் உயர் அதிகாரிகளாய் இருந்தனர்.

5. குடியேறிய இந்தியத் தமிழர்கள் தோட்டங்களுக்குள்ளேயே (Estate) வெளியேற முடியாமல் வாழ்ந்தனர்.

6. கூலிகளாய் இருந்தனர்.

www.padippakam.com



7. கல்வியறிவு கொடுக்கப்படாததால், எதையும் புரியும் தன்மை இல்லாதவர்களாய் இருந்தனர்.

8. மற்றும் அரசியல் காரணங்கள்.

இதற்கான விளக்கங்களை இனிவரும் அரசியல் குறிப்புகளில் நீங்கள் கண்டு தெளிந்து கொள்ளலாம்.

## சமூக அமைப்பு

பூர்வீகக் குடிகளான தமிழர்களின் சமுதாய அமைப்பை நோக்குகையில், சாதி அமைப்பு இறுக்கமானதாகவும், தாக்கம் அதிகமானதாகவும் காணப்படுகின்றது. இச் சாதிப் பிரிவு, வெள்ளாளர், கோவியர், முக்குவர், கரையார், நளவர், பள்ளர், பறையர் எனப் பிரிக்கப்பட்டுள்ளது. இதில் இறுதியில் குறிப்பிடப்பட்ட மூன்று பிரிவுகளும் 'தாழ்ந்த சாதி'யினர் எனக் கருதப்படுகின்றன. ஏறத்தாழ 25 வருடங்களுக்குமுன் இவ்வமைப்பின் கொடுமைகள் அதிகமாகக் காணப்பட்டாலும், கடந்த 15 ஆண்டுகளுக்குள் குறைந்த நிலையில் காணப்படுகின்றன. பொருளாதாரத்தில் இன்னொருவரிடம் தங்கி வாழும் நிலைமையில் மாற்றங்கள் ஏற்படுவதாலும், கல்வி வளர்ச்சி காரணமாகவும், அணி திரண்ட போர்க் குணமும் போராட்ட முறையும் கையாளப்பட்டதாலும், "பொது எதிரியின்" (சிங்கள ஆட்சி, இனம்) தாக்கம் அதிகரிக்கப் பட்டதாலும் இவ்வமைப்பின் இறுக்கம் தளர்ந்துகொண்டிருக்கிறது.

வடக்கு மாநிலப் பகுதியில் வாழ்பவர்கள் அரசாங்க (ஸ்ரீலங்கா ஆட்சியில்) உத்தியோகம் பார்ப்பவர்களாகவும், உப உணவுப் பயிர்ப் (மிளகாய், வெங்காயம், புகையிலை) பண்ணுபவர்களாகவும், குடிசைக் கைத் தொழில் (சுருட்டு, பனங்கட்டி, பனைவோலைப் பொருட்கள்)செய்பவர்களாகவும், வியாபாரிகளாகவும் காணப்படுகின்றனர். இவர்கள் மேற் படி நிலைகளின் காரணத்தால், சிங்களப் பகுதியில் போக்கு வரத்துள்ளவர்களாகவும், சிங்களப் பகுதியில் தற்காலிகத் தங்கல் முறை உள்ளவர்களாகவும் காணப்படுகின்றனர். கிழக்கு மாநிலப் பகுதி மக்கள், பெரும்பாலும், விவசாயி

www.padippakam.com



களாகவே காணப்படுகின்றனர். வடமாநிலத்தில் காணப்படும் சாதியமைப்பின் இறுக்கம், கிழக்கு மாநிலப் பகுதியில் காணப்படுவதில்லை. வடமாநிலப் பகுதியில் கிறித்துவ, சைவ சமயத்தைப் பின்பற்றுபவர்கள் அதிகமாகவும் கிழக்குப் பகுதியில் சைவ, இசுலாமிய சமயத்தைப் பின்பற்றுபவர்கள் அதிகமாகவும் காணப்படுகின்றனர். கரையோரப் பகுதிகளில் வாழ்பவர்கள் மீன் பிடித்தல் தொழிலில் முக்கியமாக ஈடுபட்டுள்ளனர். இவர்கள் பெரும்பாலும் கிறித்துவர்களாக உள்ளனர். இவர்கள் கரையோரப் பகுதிகளில் வாழ்வதால் 'கரையார்' என அழைக்கப்படுகின்றனர்.

## வரலாறு

ஈழத்தின் [illegible] வரலாற்றைக் காலத்தால் நிர்[illegible] முடியவில்லை. போதிய வரலாற்றுச் சான்றுகளுமில்லை. இலக்கியங்களைக் கொண்டே வரலாற்றை அறிய வேண்டியுள்ளது. எங்கிருந்தாவது வந்து குடியேறினார்களா என்பதற்கும் சான்றுகள் போதிய அளவு இல்லை. ஆதலால் அவர்களைப் பூர்வீக நிரந்தர மக்களாகவே கொள்ள வேண்டியுள்ளது. நாம் சரியான—ஆதாரமான வரலாற்றின் அடிப்படையில் நோக்குகையில் 1505இல் போர்த்துக்கேயர் இலங்கை வந்தடைந்தபோது ஈழத்தின் வரலாறு எப்படியிருந்தது என்பதை அவர்கள் குறிப்புகளில் இருந்து தொடக்க வேண்டியுள்ளது. யாழ்ப்பாணத்தில் நல்லூரைத் தலைநகராகக் கொண்டு "சங்கிலியன்" என்னும் மன்னன் ஆண்டுகொண்டிருந்தான். இந்த மன்னர் பரம்பரையினர் "ஆரியச் சக்கரவர்த்திகள்" என அழைக்கப்பட்டனர். இவர்களின் ஆட்சியின் கீழ் ஈழ நிலப்பரப்பு முழுவதும், பல ஆட்சிப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஆளப்பட்டு வந்தது. போர்த்துக்கேயர் இலங்கையைக் கைப்பற்றியபோது, "சங்கிலியன்" கடுமையாக எதிர்த்துப் போர் புரிந்தான். ஆனால் அவர்களின் ஆயுதப் படை வலிமையின் முன் தொடர்ந்து எதிர்த்து நிற்க

www.padippakam.com



முடியாததால் "சங்கிலியன்" சிறைப்பிடிக்கப்பட்டு இந்தியாவின் "கோவா"வுக்குக் கொண்டு வரப்பட்டுத் தூக்கிலிடப் பட்டான். ஆனாலும் யாழ்ப்பாண அரசைத்தான் போர்த்துக்கேயரால் கைப்பற்ற முடிந்ததே தவிர, 'வன்னி ராச்சியம், கொட்டியாரப்பற்று, பழுங்காம வன்னிமை' போன்ற ஆட்சிப் பிரிவுகளைக் கைப்பற்ற முடியவில்லை. அவை தொடர்ந்து தனித்து ஆட்சி புரிந்தன. போர்த்துக்கேயரை எதிர்த்தன. கிழக்குக் கரையோரமுள்ள மூன்று ஆட்சிப் பிரிவுகள், தம் பாதுகாப்புக் கருதி கண்டி அரசின் மேலாணையை ஏற்றிருந்தன.

1638இல் இரண்டாவது அந்நியர்களான ஒல்லாந்தர் வந்தபோது மேற் குறிப்பிட்ட நிலைமை காணப்பட்டது. அதாவது யாழ்ப்பாண அரசு போர்த்துக்கேயரின் கீழும், வன்னி அரசு தனித்தும், கிழக்குக் கரையோர வன்னிமைகள் கண்டி அரசின் மேலாண்மையையும் கொண்டு விளங்கின.

ஒல்லாந்தர் மட்டக்களப்பைத் தாக்கி, கோட்டை அமைத்துக் கொண்டு போர்த்துக்கேயரை நாட்டை விட்டு வெளியேற்றினர். ஒல்லாந்தர் ஆண்டுகொண்டிருந்த போது வன்னி அரசு தனித்தே இருந்திருக்கின்றது. எதிர்த்தே வந்திருக்கின்றது. "கைலாய வன்னியன்" என்பவன் இப்பகுதியை ஆட்சி செய்தான்.

சிங்கள நாட்டினத்துக்கும், தமிழ் நாட்டினத்துக்கும் உள்ள அடிப்படை வேறுபாடுகளையும், தனித்துவமான நிலப் பகுதிகளையும் தெரிந்து கொண்ட ஒல்லாந்தர், நீதி நிர்வாக ஆட்சி முறை என்பவற்றைத் தனித்தனியாக நிர்வகிக்க ஏற்ற முறையில் ஆட்சி அமைத்தனர். யாழ்ப்பாணத்து மக்களின் வழமைகள் நீதிமுறைகள் தனியானவை என்பதை அறிந்து "தேச வழமை" என்ற பெயரில் சட்டங்களைத் தொகுத்து ஒல்லாந்தர் வெளியிட்டனர். அதற்கமைய நீதி செலுத்தினர். இதனைத் தொகுத்து வெளியிட்டவர் ஜோகன்ஸ் சைமன்.

1796இல் ஆங்கிலேயர் வருகையுடனும் அமியன் உடன் படிக்கையின் படியும், ஒல்லாந்தரின் காலக் கட்டம் முடிவுறு

படிப்பகம்

www.padippakam.com



கின்றது. இவர்களது ஆட்சிக் காலத்தில்தான், இதுவரை தனித்தும் எதிர்த்தும் ஆட்சி புரிந்த வன்னிராச்சியம் வீழ்ச்சியுறுகின்றது. அதனை ஆட்சி செய்த "பண்டாரவன்னியன்" "காக்கைவன்னியனின்" துரோகத்தினால் காட்டிக் கொடுக்கப்பட்டு, சுடப்பட்டு இறக்கின்றான். இத்துடன் ஈழவரின் ஆட்சியின் மிச்சசொச்சமும் முற்றுப் பெறுகின்றது.

தமிழரின் தனித்துவம், தனி ஆட்சி அனைத்தும் ஒழிக்கப்பட்டு, நிர்வாக வசதிக்காக, இலங்கை ஒரே ஆட்சி முறைக்குக் கொண்டுவரப்படுகின்றது. ஈழமும், சிங்கள நாடும் இப்படி வலிந்து இணைக்கப்பட்டதன் மூலம், இன்றைய பிரச்சினைகளுக்கு அடித்தளம் இடப்படுகின்றது.

1821இல் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கைக்காக (தேயிலை, ரப்பர்) தென் இந்தியாவில், குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத்தில் இருந்து தமிழர்கள், ஆசை காட்டி, ஏமாற்றி அழைத்துச் செல்லப்பட்டனர். இதுவும், இன்றைய ஈழவரின் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

உலக அரங்கின் அரசியல் நிர்ப்பந்தங்கள் காரணமாக 4—2—1948இல் ஆங்கிலேயர் இலங்கையை விட்டு வெளியேறுகின்றனர். ஆனால் வெளியேறும் போதே பிரச்சினைகளுக்குத் தூபம் இட்டுவிட்டுச் செல்கின்றனர். தாங்கள் வந்தபோது "இலங்கை" என்பது எப்படி இருந்தது என்பதை மறந்துவிட்டு இணைக்கப்பட்ட (ஈழம் — ஸ்ரீலங்கா) இலங்கையாக விட்டுச்செல்கின்றனர். அத்துடன் இலங்கையருக்கு வழங்கிய அரசியல் சட்டத்தில் ஈழவரைச் சிறுபான்மை இனமாகக் குறிப்பிட்டுச் சலுகைகள் வழங்கிச் சட்டத்தில் ஒரே ஒரு பிரிவில் (29ஆம் பிரிவு பாதுகாப்பு என்னும் கண்துடைப்பு வேலையைச் செய்துவிட்டுச் சென்று விடுகின்றனர். இதிலிருந்து பிரச்சினை வேகமாக வளர ஆரம்பிக்கின்றது.

**பொருளியல் நிலை**

இன்றைய இலங்கையின் பொருளாதாரத்தைத் தாங்கிப்பிடிப்பதில் தேயிலையும், ரப்பரும் முக்கிய இடத்தை

படிப்பகம்

வகிக்கின்றன. ஏறத்தாழ 60%க்கு மேல் அந்நியச் செலாவணியை இப்பொருட்கள் தேடிக் கொடுக்கின்றன. இதை உற்பத்தி செய்து உழைப்பதில் மலையகத்தில் (Up Countrics) வாழும் 10 இலட்சம் தமிழர்கள் (இந்தியாவில் இருந்து குடியேற்றப்பட்டவர்கள்) முழுப்பங்கையும் வகிக்கின்றனர். இலங்கையின் மீன் தேவையைப் பூர்த்தி செய்வதில் ஈழவர்களே பெரும்பங்கு வகிக்கின்றனர். ஈழத்தின் கடற்கரைப் பகுதி முழுவதும் மீன்பிடித் தொழில் நடைபெறுகின்றது. உணவு உற்பத்தியைப் பொறுத்தவரையில் ஈழமே முதன்மை வகிக்கின்றது. இலங்கையின் "நெற் களஞ்சியம்" என அழைக்கப்படும் கிழக்குப் பகுதி ஈழத்தின் நிலப்பரப்பாகும். வருட முழுவதும் இங்கு நெல் விளைவிக்கப்படுகிறது. உப உணவு உற்பத்தியிலும் ஈழமே முன்னணியிலிருக்கின்றது குறிப்பாக மிளகாய், வெங்காயம் முதலியவற்றில் இலங்கையின் முழுத்தேவையையும் ஈழமே பூர்த்தி செய்கின்றது. புல் மோட்டையில் காணப்படும் "இல்மனைட்" என்னும் கனிப்பொருளின் ஏற்றுமதி மூலம் பல கோடி ரூபாயை அரசு அந்நியச் செலாவணியாகப் பெறுகின்றது.

1973—74இல் இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட

| | |
|---|---|
| நெல் மொத்தம் புசல்களில் (30 கிலோ) | 7,67,98,000 |
| இதில் ஈழத்தின் பங்கு | 1,92,36,000 |

1974இல் இலங்கையின் மொத்த கரையோர

| | |
|---|---|
| மீன் பிடி | 92,221 டன் |
| ஈழத்தின் பங்கு | 55,240 டன் |

ஈழத்தின் வளத்தை — மூலப்பொருட்களை உபயோகப் படுத்தியதன் மூலம் 1973இல் மொத்த உற்பத்தி:

| | |
|---|---|
| சிமெண்ட் | 4,15,143 டன் |
| நூல் | 19,337 " |
| இரசாயனப் பொருட்கள் | 3,331 " |
| சீனி | 8,623 " |

1974இல் 'இல்மனைட்' ஏற்றுமதி மூலம் கிடைத்த அந்நியச் செலாவணி 10.8 மில்லியன் ரூபாய்

www.padippakam.com



இவை தவிர்த்து இலங்கை அரசின் மாற்ருன் மனப்போக்கினுல் பயன்படுத்தப்படாமல் பருத்தித்துறை கடற்கரையெங்கும் காணப்படும் கண்ணுடி மணலும், சேருவாவிலவில் காணப்படும் செம்பு கலந்த இரும்பும், மன்ஞரில் இருப்பதாக நம்பப்படும் பெட்ரோலும் ஈழத்தில் உள்ளன. இவை தவிர்த்து "கற்பகதரு" என அழைக்கப்படும் பனை ஈழத்தில் (76,00,000) 76 இலட்சம் காணப்படுகின்றது.

## பிரச்சினைகளின் வளர்ச்சி முறை

"மகனே! ஏன் நீட்டி நிமிர்ந்து படுக்காமல் கைகளையும் கால்களையும் மடக்கிக்கொண்டு உடலைக்குறுக்கிப் படுத்துக் கொண்டிருக்கிருய்?" என்று தாய் ஒருத்தி கேட்க "வடக்கேயும், கிழக்கேயும் தமிழர்கள், மேற்கேயும் தெற்கேயும் கடல்கள், எப்படியம்மா என்னுல் நீட்டி நிமிர்ந்து படுக்க முடியும்" என்று மகன் பதிலிறுக்கின்ருன். இவ்வுரையாடல் கி. மு. 161—117 காலக் கட்டத்தில் நடந்ததாகக் கர்ணபரம்பரை கதை ஒன்றுண்டு. இதில் எவ்வளவு உண்மையிருக்கின்றதோ ஆதாரம் கூற முடியவில்லை. ஆனுல் எல்லாளன் என்னும் தமிழ் மன்னன் இலங்கை முழுவதும் ஆண்டு கொண்டிருந்ததாகவும், சிங்களவர் தமிழர் ஆட்சியைக் கைப்பற்ற முயன்றதாகவும், "துட்டகைமுனு" என்னும் சிங்கள இளவரசன் அதற்குத் தலைமை தாங்கியதாகவும் இறுதியில் யானை மீதேறி எல்லாளனும், துட்டகைமுனுவும் பழைய போர் முறையான அரசனும் அரசனும் மோதும் நேர்ச்சண்டை முறையில் போரிட்டத்தில் எல்லாளன் ஆயுதங்களை இழந்தபோது வஞ்சகமாக கைமுனு வீழ்த்திக் கொன்றதாகவும் வரலாற்றுக் குறிப்பொன்று கூறுகின்றது. மேலே கூறப்பட்ட உரையாடலில் பதிலிறுத்த மகன் இத் துட்டகைமுனுதான் என்றும் கூறப்படுகின்றது. இது ஏன் இங்குக் குறிப்பிடப்படுகின்றதென்ருல் அக்காலத்திலேயே இரு இனங்களுக்கிடையான பகைமை, உறவுநிலையற்ற தன்மை காணப்பட்டது என்பதைக் காட்டுவதற்குத்தான்.

www.padippakam.com



**தனிச்சிங்கள மந்திரிசபை**

பிரிட்டிசாரின் ஆட்சிக்காலத்தில் காலத்துக்குக்காலம் இங்கிலாந்தில் இருந்து அனுப்பப்பட்ட அறிஞர்களைக் கொண்ட குழுக்கள் இலங்கைக்குத் தேவையான அரசியல் சீர்திருத்தங்களைச் சிபாரிசு செய்தன. இதன்படி 1927இல் டொனமூர் என்பவரால் சிபாரிசு செய்யப்பட்ட சீர்திருத்தத்தின்படி படித்த இலங்கையருக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டதன்மூலம் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் உரிமையும், மந்திரிசபை அமைக்கும் வசதியும் செய்யப்பட்டது. இதன்படி 1936ல் அமைக்கப்பட்ட அமைச்சரவை "தனிச்சிங்கள மந்திரி சபை"யாக "பரண்ஜெயதிலகா" என்பவரால் அமைக்கப்பட்டது. தமிழர்கள் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டனர். இதனால் இலங்கையின் சுதந்திரத்திற்காக இயக்கம் நடத்திய சேர். பொன். அருணாசலம் போன்ற பெரியோர்கள் தமிழர்களுக்கான தனி இயக்கம் "இலங்கைத் தமிழர் மகாசபை" என்ற பெயரில் ஆரம்பிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இலங்கைக்குச் சுதந்திரம் வேண்டுமென போராடியவர்கள் "இலங்கை தேசிய காங்கிரஸ்" என்ற இயக்கம் ஆரம்பித்து நடத்தியவர்கள், தமிழர்களேயாவர். ஆனால் அவ்வியக்கம் இறுதியில் சிங்களவரின் கையிலேயே போய் சேர்ந்தது. மேலே குறிப்பிட்ட "தனிச்சிங்கள மந்திரிசபை" அமைக்கப்பட்டபோது அதை அமைத்த "பரண்ஜெயதிலகா" கூறிய கூற்று இந்நூற்றாண்டில் ஈழவர்களுக்கெதிராக வெளியிடப்பட்ட இனவெறிக் கருத்துகளில் மிகவும் மோசமானதும் முதன்மையானதுமாகும். அவர் "இம் மந்திரிசபை ஏன் அமைக்கப்படுகின்றதென்றால், சிறுபான்மையினராகிய உங்களின் (ஈழவரின்) உதவியின்றி எங்களால் (சிங்களவர்) ஆட்சி அமைக்க முடியும். எங்களுக்குத் திறமையுமுண்டு. உங்களுக்கு உரிமை வேண்டுமானால் எங்களைக் கேட்டுத்தான் பெறமுடியும். நாங்கள்தான் தரமுடியும் என்பதைக் காட்டுவதற்குத்தான்" என்னும் கருத்துப்படக் கூறியுள்ளார்.

1945இல் "சோல்பரி" என்பவரால் சிபாரிசு செய்ததன்படியும், உலக அரங்கில் அரசியல் நிர்ப்பந்தங்களின்படியும்

www.padippakam.com



4—2—1948இல் இலங்கைக்கு வழங்கப்பட்ட சுதந்திரம் பெரும்பான்மையினரான சிங்களவரின் கைக்குப்போய்ச் சேர்ந்தது. தமிழர் மீதான அடக்குமுறையும், ஒதுக்கல் முறையும், பழிவாங்கலும் ஆரம்பமாயின.

## குடியுரிமைச் சட்டம்

சுதந்திரம் வழங்கப்பட்ட 10 மாதத்திற்குள் 19—11—1948இல் பெரும்பான்மை அரசால் (ஸ்ரீலங்கா) கொண்டுவரப்பட்ட இச்சட்டத்தின் மூலம் ஈழவருள் ஒரு பகுதியினரின் குடியுரிமை மறுக்கப்பட்டது. அதாவது இந்தியாவில் இருந்து குடியேற்றப்பட்ட 10 இலட்சம் தமிழர்களின் உரிமையே இப்படிப் பறிக்கப்பட்டது. இதன் மூலம் அவர்கள் நாடற்றவர்களானார்கள். 1947ஆம் ஆண்டுத் தேர்தலில் 8 உறுப்பினர்களைப் பாராளுமன்றத்துக்கு அனுப்பிய மக்கள் இச்சட்டம் கொண்டுவந்ததின்பின் எந்த ஒரு பிரதிநிதியையும் அனுப்ப முடியாத நிலை ஏற்பட்டது. இச் சட்டம் கொண்டுவந்த ஆட்சியை நடத்திக் கொண்டிருந்த கட்சி ஐக்கிய தேசியக் கட்சி எனப்படும் 'U.N.P.' யாகும். இன்று, அதாவது 1977க்குப் பின் இக் கட்சியே ஆட்சிபுரிகின்றது.

## தனிச் சிங்களச் சட்டம்

1956ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் "நாங்கள் வந்தால் 24 மணி நேரத்தில் சிங்களத்தை மட்டும் ஆட்சி மொழியாகக் கொண்டு வருவோம்", என அறிவித்ததின் மூலம் S. W. R. D. பண்டாரநாயகா என்பவரின் தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்னும் 'S.L.F.P.' கட்சியைச் சிங்களப் பெரும்பான்மை மக்கள் வாக்களித்ததன் மூலம் ஆட்சிக்குக் கொண்டு வந்தனர். 1956ஆம் ஆண்டு மே மாதம் ஆட்சிக்கு வந்தவர்கள் ஜூன் மாதத்தில் தாங்கள் அறிவித்தபடி சிங்களம் மட்டும் சட்டத்தைக் கொண்டு வந்தனர். இதன் மூலம் அரசாங்கத்தில் வேலை செய்து கொண்டிருந்த ஏராளமான ஈழவர்கள் பாதிக்கப்பட்டனர். ஏனெனில் அரசாங்க வேலை செய்வதற்குக்

"கட்டாயம் சிங்களம்" படிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. மிகக் குறைந்தது சிங்களத்தில் 8ஆம் வகுப்புவரை படித்திருக்க வேண்டும் எனக் கட்டளை பிறப்பிக்கப்பட்டது. சிங்களம் ஈழவர் இடையில் திணிக்கப்பட்டது.

1958 சனவரியில் இன்னொரு சட்டம் இதே ஆட்சியினரால் கொண்டு வரப்பட்டது. அச் சட்டத்தின்படி வண்டிகளில் பொறிக்கப்படும் எண்களின் முதலெழுத்து "ஸ்ரீ" எனச் சிங்களத்திலேயே குறிப்பிடப்பட வேண்டுமெனக் கட்டளை இடப்பட்டது. அதுவரை வழக்கத்தில் இருந்த ஆங்கில எழுத்துகள் அகற்றப்பட்டன.

1949இல் ஈழ நிலப் பகுதியான கிழக்குப் பகுதியில் "கல்லோயா அபிவிருத்தித் திட்டம்" என்ற பெயரில் சிங்களவர் குடியேற்றப்பட்டனர். இதன் மூலம் ஈழவரின் நிலப் பகுதியை ஆக்கிரமிக்கும், பறிக்கும் படுபாதகமான திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஈழத்துப் பகுதிகளில் அரசின் உதவியுடன் சிங்களவர் குடியேற்றப்பட்டனர், பௌத்தக் கோயில்கள் எழுப்பப்பட்டன.

## முதல் இனக் கலவரம்—1958

மேற்படி நடவடிக்கைகள் காரணமாக ஈழவருக்கும் சிங்களவருக்கும் ஏற்பட்ட மனக்கசப்பு, 1958இல் மிகப் பெரும் இனக் கலவரமாக உருவெடுத்தது. பல ஈழவர் கொல்லப்பட்டனர், மகளிர் கற்பழிக்கப்பட்டனர். பெண்களின் மார்புகளில், தொடைகளில், சிங்கள "ஸ்ரீ" குத்தப்பட்டது, சொத்துகள் சூறையாடப்பட்டன. ஸ்ரீலங்காவில் இருந்து ஈழவர் ஈழத்தை நோக்கி அகதிகளாக ஓடி வந்தனர். ஸ்ரீலங்காவின் நகரமான கொழும்பில் இருந்து கப்பலில் ஈழவர் அனுப்பப்பட்டனர்.

1965இல் நடந்து முடிந்த தேர்தலில் சிங்களக் கட்சிகளான ஐ. தே. கட்சியும், சுதந்திரக் கட்சியும் பெரும்பான்மை பலத்தைப் பெற முடியாததால், ஆட்சியமைக்க சிக்கல் ஏற்பட்டபோது, இரு கட்சியினரும், ஈழவரின், பாராளுமன்றப் பிரதிநிதிகளை அணுகி, ஆசை வார்த்தைகள்

www.padippakam.com



கூறி, ஒப்பந்தங்கள் செய்து, ஈழவர் பிரச்சினைகளைத் தீர்ப்பதாகக் கூறி, ஆதரவு கோரினர். இந்நிலையில் ஈழவர் பிரதிநிதிகள் ஐ. தே. க.க்கு ஆதரவு தெரிவித்ததின் மூலம் ஐ. தே. க. ஆட்சிக்கு வந்தது. ஆனால் அவர்கள் ஒப்பந்தத்தை நிறைவேற்றாமல் ஏமாற்றி வந்த காரணத்தால், ஈழப்பிரதிநிதிகள் அரசுக்கு ஆதரவு தருவதினின்று விலகினர். ஆட்சியினரும் ஒப்பந்தத்தைக் கிழித்தெறிந்தனர்.

**தரப்படுத்தல் திட்டம்**

1970இல் திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான சு. கட்சி ஆட்சிக்கு வந்ததும், கல்விமுறையில் புதிய திட்டம் ஒன்றைக் கொண்டு வந்தனர். இதற்குத் "தரப்படுத்தல்" என்ற மகுடம் இட்டுச் சட்டம் கொண்டு வந்தனர். இதன் மூலம் ஈழ மாணவரின் கல்விக்கு மரண அடி கொடுக்கப்பட்டது. பல்கலைக் கழகம் செல்வதற்குச் சிங்கள மாணவனை விட ஈழ மாணவன் கூடுதலான புள்ளிகள் எடுக்க வேண்டியேற்பட்டது. இதனால் பல்கலைக்கழகத்துக்குத் தேர்வு செய்யப்படும் ஈழ மாணவர் பெருந்தொகையாக புறக்கணிக்கப்பட்டனர். அவர்களது எதிர்காலமே இருள் சூழ்ந்த நிலையில் காணப்பட்டது. பின்வரும் அட்டவணையை நீங்கள் பார்க்கும்போது இதன் தன்மை நன்றாகப் புலனாகும்.

| | சிங்கள மாணவன் புள்ளி | ஈழ மாணவன் புள்ளி |
|---|---|---|
| மருத்துவம் | 229 | 260 |
| பௌதீகம் | 183 | 204 |
| உயிரியல் | 175 | 184 |
| பொறியியல் | 227 | 250 |
| மிருக வைத்தியம் | 181 | 206 |
| கட்டிடக் கலை | 180 | 194 |

இத் திட்டம் கொண்டு வந்தும் 1972இல் ஈழ மாணவர் கூடிய பல்கலைக்கழகம் செல்லத் தகுதியுடைய அதிகமானவர் தெரிவாக்கப்பட்டதால் அதைத் தவிர்ப்பதற்குச் "செனட்" சபைக்கு அறிவிக்கப்படாமலேயே, கல்வி அமைச்சர் மாணவர்களைத் தெரிவு செய்து அறிவித்தார். இதனால் தகுதியிருந்தும் ஈழ மாணவர் பல்கலைக்கழகம் செல்ல முடியவில்லை.

**புதிய அரசியல் சட்டம்**

1972ம் ஆண்டு இந்த ஆட்சியினரால்; இதுவரை நடைமுறையில் இருந்த "சோல்பரி அரசியல் திட்டத்தை மாற்றியும்," முடிக்குரிய நாட்டு நிலையை மாற்றியும், புதிய அரசியல் திட்டம், மே 22ஆம் நாள் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டது. "ஸ்ரீலங்கா குடியரசு" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இப் புதிய அரசியல் சட்டத்தில்



படிப்பகம்

www.padippakam.com



மூலம், ஈழவருக்கிருந்த அற்ப சொற்ப சலுகைகளும் சட்டத்தின் பாதுகாப்பும் முற்றாக மறுக்கப்பட்டன. இச் சட்டத்தின்படி,

அ. இலங்கை என்பது ஒரே நாடு. அது "ஸ்ரீலங்கா குடியரசு" என அழைக்கப்படும்.

ஆ. ஸ்ரீலங்காவின் அரசாங்க மொழி சிங்களம் மட்டுமே.

இ. புத்த மதம்தான் அரசாங்க மதம்.

ஈ. நீதிமன்ற மொழி சிங்களமே. ஆயினும் மற்றைய மொழி எது என்பதைத் தேசிய சபை (Parliment) தீர்மானிக்கும்

எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மற்றும், "சோல்பரி" அரசியல் திட்டத்தில் வழங்கப்பட்டிருந்த 29-ஆம் பிரிவு என்னும் சிறுபான்மை இனங்களுக்கான பாதுகாப்பு இச் சட்டத்தில் முற்றாகப் புறக்கணிக்கப் பட்டதுமின்றி, சிறுபான்மை இனங்களுக்கு வேறு எந்த வசதியும் செய்து தரப்படவில்லை.

1973-ஆம் ஆண்டில் ஈழவரின் ஒரு பகுதியினர் அந்நாளது மலையகத் தமிழர் உழைக்கும் தோட்டங்கள் (Estate) அனைத்தும் தேசியமயமாக்கப்பட்டன. இதுவரைவேற்கவேண்டியதும், அவசியமானதும்கூட, ஆனால் தேசியமயமாக்கப்பட்ட தோட்டங்களில் இருந்து தொழிலாளர்கள் பலர் ஈழவர் என்ற காரணத்தால் விரட்டியடிக்கப்பட்டனர். அவர்கள் நாட்டின் பல நகரங்களில் பிச்சை எடுப்பவர்களாக மாறினார்கள். அவர்களின் இடங்களில் சிங்களத் தொழிலாளர்கள் நிரப்பப்பட்டனர். இக் கொடுமையை எதிர்த்து, அந்தச் சிங்களத் தொழிலாளியும், அவர்களின் இயக்கங்களும் குரல் கொடுக்கவில்லை.

**9 பேர் படுகொலை**

1974இல் ஈழத்தின் முக்கிய நகரங்களில் ஒன்றான யாழ்ப்பாணத்தில், 4-ஆவது தமிழாராய்ச்சி மாநாடு, எந்வித அரசியல் கலப்புமின்றி, ஒழுங்கும், மொழி கலாச்சார ஆய்வு மாநாடாக நடைபெற்றபோது, ஈழவர் அதனைப் பெரும் விழாவாக, கோலாகலமாக, உணர்ச்சியுடன் நடத்தினார்கள், கொண்டாடினார்கள். ஆறு நாள் நடைபெற்ற இம் மாநாட்டின் இறுதி நாளின்போது வெறிபிடித்த காவலர்களால் நடத்தப்பட்ட தாக்குதலில் 9 ஈழவர்கள் உயிரைத் துறக்கவும், பலர் காயமடையவும் வேண்டிய மோசமான நிலை ஏற்பட்டது. அது தொடர்பாக, இறந்தவர்களின் நினைவுச்சின்னம் அடுத்த ஆண்டு அதே நாள், யாழ் நகரில், மாநாடு நடந்த இடத்தில் ஈழவர்களால் அமைக்கப் பட்டபோது, அவ்விரவே, சிங்களப் போலீசாரால்

www.padippakam.com



அடித்து நொறுக்கி நாசமாக்கப்பட்டது. அப்படியே தொடர்ந்து அடுத்து இரு வருடங்கள் நினைவுச் சின்னம் அமைக்கப்பட்ட போதும் அவை நாசமாக்கப்பட்டன. இன்றும் அந்நினைவுச் சின்னம் நொறுக்கப்பட்ட நிலையிலேயே காணப்படுகின்றது. அதற்குத்தான் இன்றும் ஈழவர்கள் அஞ்சலி செலுத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

**12 பேர் படுகொலை**

1975ஆம் ஆண்டில் இசுலாம் மதக் கொள்கையைத் தழுவிய ஈழவர்கள் மீது சிங்களவெறியர்களாலும், காவலர்களாலும் நடத்தப்பட்ட தாக்குதலில் 12 பேர் கொல்லப்பட்டதுடன் பலர் காயமும் அடைந்தனர். இச்சம்பவம் புத்தளம் என்னும் இடத்தில் நடந்தது. இவ்விடம் தற்போதைய ஈழவர்கள் விடுவிக்கவிருக்கும் ஈழத்துக்குள் அடங்காவிட்டாலும், சில நூற்றாண்டுகளுக்கு முன் தமிழர்கள் வாழும் பிரதேசமாகவும், தமிழர்களின் ஆட்சிப் பிரதேசமாகவும் விளங்கியது. ஆனால் காலஞ் செல்லச் செல்ல அப்பகுதி சிங்களக் குடியேற்றங்களாலும், சிங்களத் திணிப்பாலும் சிங்களப் பிரதேசமாக மாற்றப்பட்டது. அதன் கடைசி முயற்சியில் [illegible] மேற்படி சம்பவம் நடத்தப்பட்டது. அச்சம்பவத்தின்போது, அந்த ஈழச் சகோதரர்கள் தங்கள் பள்ளியில் இருந்து தொழுகை நடத்தியபோது பள்ளிக்குள்ளும் புகுந்து தாக்கினார்கள், சுட்டார்கள், பள்ளிவாசலும் சேதமாக்கப்பட்டது.

**இரண்டாவது 1977 ஆகசுடு இனக் கலவரம்**

1977ஆம் ஆண்டு ஆகசுடு மாதத்தின் பிந்தைய நாட்கள் மிகக் கொடுமையான நாட்களாகும். இரண்டாவது தடவையாக அதாவது 1958க்குப்பின் கிட்டத்தட்ட 20 ஆண்டுகளுக்குப்பின் அன்று நடந்தது போன்றே "இனக்கலவரம்" ஒன்று ஏற்பட்டது. ஈழம் முழுவதும் சிங்களக் காவலரால் நடத்தப்பட்ட வெறியாட்டத்தில், பலர் அடிபட்டும், கடைகள் எரிக்கப்பட்டும், கொள்ளையடிக்கப்பட்டும், வீடுகள் தீயிடப்பட்டும், கொடுமைகள் இழைக்கப்பட்டன. யாழ்ப்பாண நகரின் மத்தியப்பகுதியாகிய சந்தைப் பகுதியும் அதற்கு அருகாமையிலுள்ள கடைகள் அனைத்தும் பெட்ரோல் ஊற்றிக் கொளுத்தப்பட்டன. சிங்களப் பகுதியிலும் மலைநாட்டிலும் வாழ்ந்த ஈழவர்கள், வாளால் வெட்டப்பட்டும், கத்தியால் குத்தப்பட்டும், துப்பாக்கியால் சுடப்பட்டும் கொல்லப்பட்டனர். அப் பகுதிகளில் இருந்து விரட்டியடிக்கப்பட்டனர், கடைகள் தீயிடப்பட்டன. கொள்ளையடிக்கப்பட்டன. பெண்கள் சிறுமி முதல் கிழவி வரை பலர் கற்பழிக்கப்பட்டனர். பெண்களின் மார்புகள்

www.padippakam.com



வெட்டப்பட்டன. ஈழத்தை நோக்கி மக்களெல்லாம் கால் நடையாகவே காட்டுப்பாதைகளில் ஓடிவந்தனர். சிங்களம் பகுதிகளில் உள்ள பொதுநிலையங்களில் அடைக்கலப் புகுந்தனர். பல்லாயிரக் கணக்கானோர் அகதிகளாயினர். ஈழவர் சிலர் துணிச்சலுடன் அரசாங்கப் பேருந்துகளில், அகதிகளான ஈழவரை ஈழத்தை நோக்கி அழைத்து வந்தனர். இரண்டாவது தடவையாக, கொழும்புத் துறைமுகத்தில் இருந்து "லங்காராணி" என்னும் கப்பலில் ஈழத்துக்குக் கடல்வழி அனுப்பப்பட்டனர். ஆகாய விமானமும் ஓய்வின்றி அகதிகளை ஈழத்திற்கு ஏற்றிவந்து இறக்கிக் கொண்டிருந்தது. இக்கலவரத்தின் மூலம், 300 பேருக்கு மேல் கொல்லப்பட்டிருக்கின்றனர் எனவும், 100 கோடி ரூபாய்க்கு மேல் கொள்ளையடிக்கப்பட்டிருக்கிறது அல்லது சேதப் படுத்தப்பட்டிருக்கிறது எனவும், 50000க்கும் மேல் ஈழவர் அகதிகளாக்கப்பட்டிருக்கின்றனர் எனவும் அதிகாரப்பூர்வ மற்ற புள்ளிவிபரங்கள் கூறுகின்றன. ஆயினும் இப்போது "சன்சோனி" என்பவரின் தலைமையில் இக்கலவரத்தைப் பற்றி நடத்தப்படும் விசாரணையில் மேலே கூறப்பட்டதிலும் விட அதிகமான பல திடுக்கிடும் செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இன்னும் சில மாதங்களில் முடியுமென எதிர்பார்க்கப்படும் இவ்விசாரணையின் முடிவில், உண்மையான புள்ளி விபரங்கள் தெரிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஈழவர் தம் வாழ்வில் என்றும் மறக்க முடியாத இரத்தக்கறை படிந்த சம்பவங்களில் இது முக்கியமானதாகும்.

**ஈழ நிலம் பறிக்கப்படுகின்றது**

ஈழப் பகுதிகளில், நிலங்களில் சிங்களவரைக் குடியேற்றுவதன் மூலம், ஈழத்தின் தனித் தன்மையையும், ஈழவரின் மொழி, கலாச்சார, பொருளாதாரத்தையும் சிதைக்கும் அழிக்கும் நோக்கத்துடன் சிங்கள அரசுகள் அன்று தொட்டு முயன்று வருகின்றன. குடியேற்றத் திட்டங்கள் என்ற பெயரில் சிங்களப் பகுதியில், நிறைய வெறும் நிலங்களும், காடுகளும் இருந்தும், ஈழத்தின் நிலங்களிலேயே பல திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. அரசே சிங்கள மக்களைக் கொண்டு சென்று குடியேற்றியது. சகல வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன. சிங்கள மக்கள் மத்தியில் ஈழத்தில் குடியேறுவதற்கு ஆர்வத்தை ஊட்டுவதற்காக பிரச்சாரம் செய்வதற்காக பல இயக்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. பௌத்தமத பீடங்களும் சிங்களவர் மத்தியில் பிரச்சாரம் செய்ததுடன், அவர்களைக் கொண்டு வந்தும் குடியேற்றின. அத்துடன் தாங்களும் பௌத்த கோயில்களை நிறுவினர்.

www.padippakam.com



இவ்வாறு ஈழப் பகுதிகளில் இருந்து சிங்களப் பிரதிநிதிகள் பாராளுமன்றம் செல்லும் அளவுக்குக் குடியேற்றவாதம் (Colonisation) வளர்ந்துள்ளது. ஈழத்தின் கிழக்குப் பகுதியில் அம்பாறை என்னும் இடத்தில் இருந்தும், சேருவாவில என்னும் இடத்தில் இருந்தும் சிங்களப் பிரதிநிதிகள் பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அதாவது இன்று அவை சிங்களப் பிரதேசமாகவே மாற்றப்பட்டு விட்டன. கீழே காணும் அட்டவணையைக் கவனித்தால் இதன் தன்மை உங்களுக்கு நன்குபுரியும்.

| | 1953 தமிழர்—சிங்களவர் | 1971 தமிழர்—சிங்களவர் |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 477304—6183 | 673043—20402 |
| திருக்கோணமலை | 375‹7 15296 | 73255—55308 |
| மட்டக்களப்பு | 130381—31174 | 246582—94150 |
| வவுனியா மன்னார் பகுதி | —— | 153949—19429 |

இருவேறு காலக் கட்டங்களில் எடுக்கப்பட்ட குடிமக்கள் மதிப்பில் பெற்றப்பட்ட புள்ளிவிவரங்களை நாம் காண்கிறோம். இன்னும் துல்லியமாக ஒரு உதாரணத்தை நாம் நோக்குகையில் உண்மை தெள்ளத் தெளிவாகப் புலனாகும். திருக்கோணமலையில் 1881 இல் எடுக்கப்பட்ட குடிமக்கள் மதிப்பில் தமிழர் 21262 ஆகவும் சிங்களர் 935 ஆகவும் காணப்பட்டனர்.

**வேலை மறுக்கப்படுகின்றது**

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் 45%க்கும் மேல் ஈழவர்கள் அரசாங்க உத்தியோகம் பார்ப்பவர்களாக இருந்தார்கள். நிர்வாகச் சேவையில் உயர் அதிகாரிகளாகவும், காவல் முப்படை போன்றவற்றில் அதிகமானவர்களாகவும் காணப்பட்டவர். ஆனால் சிங்களவரின் கையில் ஆட்சி அதிகாரம் வந்ததும் படிப்படியாக ஈழவர் ஒதுக்கப்பட்டனர். அவர்களின் இடங்களெல்லாம் சிங்களவரால் நிரப்பப்பட்டன. இதற்கான புள்ளி விபரங்களையும் கீழே கவனியுங்கள்.

| | 1956 | 1965 | 1970 |
|---|---|---|---|
| இலங்கை நிர்வாக சேவை | 30% | 20% | 5% |
| எழுத்தர் Clerks) வேலை (தபால் தந்தி, போக்குவரத்துப்பகுதி, வைத்தியசாலை, சுங்கம்) | 50% | 30% | 5% |
| உத்தியோகஸ்தர்கள் (பொறியியலாளர், மருத்துவர், விரிவுரையாளர்) | 60% | 30% | 10% |

www.padippakam.com



| | | | |
|---|---|---|---|
| முப்படைப் பிரிவுகள் | 40% | 20% | 1% |
| அரசாங்க தொழிலாளர் (Labours) (பெருந்தோட்டத் தொழிலாளரை விட்டு) | 40% | 20% | 5% |

1973ஆம் ஆண்டுக்கான நிர்வாகச் சேவையாளராகத் (Administrative Service) தெரியப்பட்ட 100 பேரில் 6 பேரே ஈழவராவர்.

**ஈழத்தின் கட்சிகளும் இயக்கங்களும்**

ஈழத்தில், கட்சிகள், இயக்கங்கள், இவற்றின் தன்மைகளை ஆராயலாம். 1936இல் இலங்கையில் அமைக்கப்பட்ட தனிச் சிங்கள மந்திரி சபை காரணமாக "இலங்கைத் தேசியக் காங்கிரஸ் கட்சி"யிலிருந்து விலகிய சேர் பொன் அருணாசலம் அவர்கள் "இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சி" என்னும் அமைப்பை நிறுவினார். பின் 1948இல் குடியுரிமைச் சட்டம் இலங்கைப் பாராளுமன்றத்தில் கொண்டு வந்த போது, இலங்கைத் தமிழ் காங்கிரஸில் சிலர் அதனை ஆதரித்ததனால் குறிப்பாக, ஜீ.ஜீ. பொன்னம்பலம் என்பவர் சட்டத்தை ஆதரித்து வாக்களித்ததனால் சா.ஜே.வே. செல்வநாயகம், கு. வன்னியசிங்கம் போன்றோர், தமிழ் காங்கிரஸ் மலையகத் தமிழருக்குத் துரோகம் இழைத்துவிட்டது என்று கூறி, அதிலிருந்து விலகி "தமிழரசுக் கட்சி" என்னும் அமைப்பை நிறுவினர். நீண்ட காலத்திற்கு இவ்விரு கட்சிகளுமே ஈழவர் மத்தியிலான மிகப் பெரிய அரசியல் கட்சிகளாக விளங்கின.* இவை தவிர்த்து சி. சுந்தரலிங்கம் என்பவரின் தலைமையிலான, "ஈழத்தமிழர் ஒற்றுமை முன்னணி" என்னும் அமைப்பும், கருத்து முரண்பாடு காரணமாக, 1968இல் தமிழரசுக் கட்சியில் இருந்து விலகிய வ. நவரத்தினம் என்பவரின் தலைமையிலான, "சுயாட்சிக் கழகம்" என்னும் அமைப்பும் சிறிய அளவிலான அமைப்புடன் காணப்படுகின்றன. இவர்களுக்கு ஈழவர் மத்தியில் போதிய ஆதரவு கிட்டவில்லை. தேசிய ரீதியான கட்சிகளைப் பொறுத்தவரை (இலங்கை முழுவதற்குமான) ஆட்சி அமைக்கும் கட்சிகளான ஐ.தே.க., சு. கட்சி என்னும் கட்சிகள் தமிழர் மத்தியில் அமைப்புகளுடன் காணப்படாவிட்டாலும், ஆட்சி அமைக்கும்போது, இவர்களிடம் சலுகையை எதிர்பார்த்து சில ஈழவர்களால், காலத்துக்குக் காலம் அமைப்புகள் நிறுவப்படும். ஆட்சி மாற்றப்படும் போதும் அமைப்புகள் மாறிக் கொண்டிருக்கும். இவற்றைத் தவிர்த்து, கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரை, மார்க்சியத் தத்துவத்தின் காரணமாக, ஈழவர் மத்தியில் இதன் அமைப்பு காணப்படுகின்றது. மக்கள் ரீதியான

படிப்பகம்

www.padippakam.com



ஆதரவு இதற்கு இல்லாவிட்டாலும், பலமான அமைப்பைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. ஆனல், மார்க்சியத்தில் இவர்களின் திரிபு காரணமாக இன்று ஈழவர் மத்தியிலான ஆதரவு மிகக் குறைந்து வருகின்றது. அரசியல் விளைவுகள், தேசிய ரீதியான தீர்வுப் பார்வையை, ஈழவர் மத்தியில் நம்பிக்கை இழக்கச் செய்து விட்டன. அதன் விளைவு, இன்று, ஈழவர்க்கு மட்டுமான "செந்தமிழர் இயக்கம்" (Red Tamil Organization) என்னும் கம்யூனிச இயக்கம் இதுவரை கம்யூனிஸ்ட் கட்சியில் மத்தியக் கமிட்டி உறுப்பினராக இருந்து, கருத்து முரண்பாடு காரணமாக விலகிய வ. பொன்னம்பலம் என்பவரால் அமைக்கப்பட்டுள்ளது.

ஈழவரின் ஒரு பகுதியினராகிய, உழைக்கும் வர்க்கமான தோட்டங்களில் வாழும் மக்கள் (Plantation workers) சிங்கள அரசின் சட்டம் காரணமாகத் தம் அரசியல் உரிமைகளை இழந்து விட்டதனல், (குடி உரிமை, வாக்குரிமை) இவர்கள் மத்தியில் அரசியல் கட்சிகள் இடம் பெறவில்லை. மாறாக, தொழிற்சங்கங்கள் வளர்ந்துள்ளன. "இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்" "ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ்" போன்ற ஏராளமான தொழிற்சங்கங்கள் இங்குக் காணப்படுகின்றன. மேலே குறிப்பிட்டுள்ள இரண்டு தொழிற் சங்கங்களுமே மிகப் பெரிய அமைப்பை உடையனவாகும். இதில் "இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்" தென்கிழக்காசியாவிலேயே மிகப் பெரிய தொழிற் சங்கமாகும். ஏறத்தாழ 5 இலட்சத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இச்சங்கத்தில் உறுப்பினராக உள்ளனர். இதன் தலைவராக திரு. தொண்டைமான் இருக்கின்ருர்.

இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியைப் பொறுத்த வரை "சம அந்தஸ்துடன் கூடிய ஒற்றையாட்சி முறை" என்னும் கொள்கையைக் கொண்டதாக விளங்கியது. அதாவது, தமிழர்களுக்குச் சட்டத்திலும், நடைமுறையிலும் சம அந்தஸ்து வழங்கப்பட வேண்டும். ஆனல் ஆட்சி முறை "இலங்கைப் பாராளுமன்றம்" என்னும் ஒரு ஆட்சி முறையில் இருக்க வேண்டும் என வலியுறுத்தியது. ஆனல் தமிழ் அரசுக் கட்சியைப் பொறுத்த வரை "தமிழரின் பிரச்சினை ஒற்றை ஆட்சி முறையால் தீர்க்க முடியாது சமஷ்டி ஆட்சி முறையே உகந்தது" என்னும் கொள்கையை வலியுறுத்தி வந்தது. அதாவது, இங்கே இருக்கும் ஆட்சி முறையை ஒத்ததாக அவர்கள் கோரிக்கை இருந்தது. "ஈழத் தமிழர் ஒற்றுமை முன்னணியோ" தமிழர்களுக்குத் தனி நாடு அமைய வேண்டு

www.padippakam.com



மெனக் கோரியது. "சுயாட்சிக் கழக"த்தைத் பொறுத்த வரையும் இதே கொள்கையைத்தான் முன் வைத்தது. ஆனால் இக்கொள்கைகள் அனைத்தும் "பாராளுமன்ற ஆட்சி முறையை நோக்கியும், ஜனநாயகப் பாரம்பரியத்தைப் பேணியும்" முன் வைக்கப்பட்டன. தேர்தல் காலங்களில் மேடைகளில் பேசுவதும், பத்திரிகைகளில் அறிக்கை விடுவதுமே, இவர்களது நடவடிக்கைகளாகக் காணப்பட்டன. இவ்வனைத்துக் கட்சிகளின் முன்னணித் தலைவர்கள் அனைவரும், வழக்கறிஞர்களாகவே (Lawers) காணப்பட்டனர். இவர்களது செயற் குழு, பொதுக் குழு, கூட்டங்கள், பிரச்சார நடவடிக்கைகள் அனைத்தும் ஞாயிற்றுக் கிழமைகளிலேயே நடைபெற்றன. "ஓய்வு நேர அரசியல் பேசுவதே" இவர்கள் தன்மையாகக் காணப்பட்டது. இக்கட்சிகளில் "தமிழரசுக் கட்சியே" ஈழவர் மத்தியில் அதிகம் செல்வாக்கு பெற்றதாக விளங்கியது. இவர்கள், சில காலங்களில் நடத்திய சில போராட்டங்கள், நடவடிக்கைகள், இவர்கள் எழுப்பிய இனவெறி, மொழி வெறிகள், அலங்காரப் பேச்சுகள், அடுக்கு மொழிகள், எல்லாம் கட்சியை வளர்த்ததனால், இச் செல்வாக்கை இவர்கள் பெற முடிந்தது. அத்து, ஈழவரின் பிரச்சினைக்கு சரியான அணுகுமுறையுடன் கூடிய தீர்வு முறையை எவரும் முன் வைக்காததால், மக்கள், தம் பிரச்சினைக்காக தேசிய கட்சிகளுக்கு ஆதரவு அளிக்க முடியாத நிலையில் — ஏதும் செய்ய முடியாத நிலையில் இக் கட்சிக்கு ஆதரவளிக்க வேண்டி இருந்தது. ஆதலால் இக் கட்சியே பல காலமாக ஏகபோக உரிமையுடன், ஈழவரின் பிரச்சினைக்குப் பொறுப்பு வாய்ந்ததுபோல் காணப்படுகின்றது.

1972ஆம் ஆண்டு இலங்கைக் குடியரசுப் பிரகடனப்படுத்தும் புதிய அரசியல் சட்டம் கொண்டு வரப்பட்டதால் அதில் ஈழவர் உரிமைகள், சட்ட ரீதியாகவே மறுக்கப்பட்டதால், ஈழவரின் எதிர்ப்பைத் தெரிவிப்பதற்காகவும், ஈழவர்க்கான சில உரிமைகள் பற்றிய கோரிக்கைகள் எடுப்பதற்காகவும், இலங்கைத் தமிழ் காங்கிரஸ், இலங்கைத் தமிழரசுக் கட்சி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஈழத்தமிழர் ஒற்றுமை முன்னணி, மொழி வழித் தொழிற் சங்கங்கள் ஒன்றிணைந்து 14–5–1972இல், "தமிழர் கூட்டணி" என்றும் அமைப்பை உருவாக்கினர். அக் கூட்டணியின் சார்பில், சிங்கள அரசுக்கு "ஆறு அம்சக் கோரிக்கை" ஒன்றையும் விடுத்தனர்.

www.padippakam.com



1976இல் "தமிழர் கூட்டணி" என்னும் பெயரைத் "தமிழர் விடுதலைக் கூட்டணி" என்று மாற்றம் செய்துள்ளனர். தமிழரசுக் கட்சியினதும், தமிழ் காங்கிரஸ் கட்சியினதும் அமைப்புகளையும் கலைத்தனர். இதன் தலைவராக திரு. தொண்டைமான் விளங்கினார். இப்போது திரு. சிவசிதம்பரம் தலைவராகவுள்ளார். இதன் கொள்கையாக, "தமிழர்களுக்குத் தனி நாடு வேண்டும்" என்னும் கோரிக்கையை முன் வைத்துள்ளனர். ஆனால் இதன் தலைவரான, தொண்டைமானதும், இதில் அங்கம் வகிக்கும் தொழிலாளர் காங்கிரசினதும் கொள்கைகள், கருத்துகள், நடவடிக்கைகள் "தனிநாட்டுக் கொள்கைக்கு" முரண்பட்டதாகவே உள்ளன.

கடந்த தேர்தலில் "தனி நாட்டை ஈழவர் ஆதரிக்கின்றார்களா? என்பதை உலகுக்கும், சிங்கள அரசுக்கும் அறிவிக்கும் வாக்கெடுப்பாகக் கருதியே இதில் பங்கு பற்றுகிறோம்" என்று கூறி இவர்கள் தேர்தலில் போட்டியிட்டதனால், ஈழவர் தமது வாக்குகளை அளித்ததன் மூலம், ஏகோபித்த ஆதரவைத் தெரிவித்தனர். அதனால் 16 பேரைக் கொண்ட எதிர்க் கட்சியாக, இலங்கைப் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்றனர். இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவராக இதன் பொதுச் செயலாளர் அ. அமர்தலிங்கம் விளங்குகின்றார். ஒரு ஈழவர் இலங்கைப் பாராளுமன்றத்தின் எதிர்கட்சித் தலைவரானது வரலாற்றில் இதுவே முதல் தடவை. இது மகிழ்ச்சியடைய வேண்டியதான ஒரு சம்பவமாகும்.

அரசியல் கட்சிகளின் நிலை இப்படிக் காணப்பட்டாலும், 1970ஆம் ஆண்டிற்குப் பின், ஈழவரின் பிரச்சினையை முன்னெடுத்துச் செல்லும், தலைமை தாங்கும் பணி இவர்கள் கையில் இருந்து இளைஞரிடம், கைமாறிச் செல்வது உற்று நோக்கக் கூடியதாக உள்ளது. 1970ம் ஆண்டு, சிங்கள அரசு தரப்படுத்தல் என்னும் திட்டம் கொண்டு வந்ததன்மூலம் ஈழமானவரின் உயர் கல்வியில் கை வைத்ததனால், இளைஞர்களிடையே அரசியல் விழிப்புணர்ச்சிபெருமளவும் ஏற்பட்டது என்று கூறலாம். தரப்படுத்தல் திட்டத்தை எதிர்ப்பதற்காக, 1970ஆம் ஆண்டில் "மாணவர் பேரவை" என்னும் இளைஞர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கு முன்னும் பல இளைஞர் இயக்கங்கள் காணப்பட்டாலும், ஈழத்தின் அரசியல் திருப்பத்தில் இவ்வியக்கம்போல் மற்றவை பங்கு வகிக்கவில்லை. அடிப்படையான அரசியல் தத்துவம், முறையான வேலைத் திட்டம் என்பவை இவ்வியக்கத்தில்

www.padippakam.com



காணப்படாவிட்டாலும் ஈழத்தின் அரசியல் தீர்வுக்கு மாற்று வழியை அறிமுகப் படுத்தியதில் இவ்வியக்கமே முதன்மை வகிக்கின்றது. திட்டமிடப்படாத இவ்வியக்கினரின் நடவடிக்கை காரணமாக இரண்டு ஆண்டுகளுக்கு மேல் நிலைத்து நிற்க முடியவில்லை. 1973ம் ஆண்டு, மார்ச்சு மாதம், இவ்வியக்கத்தின் தலைவர்கள், உறுப்பினர்கள் எல்லாமாகச் சேர்ந்து 42 இளைஞர் கைது செய்யப்பட்டதுடன், இவ்வியக்கம் குலைந்தது. இவ்வியக்கத்தை பொன். சத்தியசீலன் முத்துக்குமாரசாமி, தவராஜா, சிவகுமார் போன்றோர் ஆரம்பித்து நடத்தினர். அடுத்து 72ஆம் ஆண்டின் பிற்பகுதியில், தமிழ் இளைஞர் பேரவை என்னும் இயக்கம் தலையெடுக்கின்றது. ஆரம்பத்தில் கருத்துக்களோ, செயல் முறைத் திட்டங்களோ எதுவும் இவ்வியக்கத்திற்குக் காணப்படாவிட்டாலும் வளர்ச்சிக் காலகட்டத்தில், திடமான கொள்கையும், செயல்முறையும் கொண்டதாக விளங்கியது. இவ்வியக்கத்தை இளைஞர் இயக்கத்தின் இரண்டாவது காலகட்டமெனலாம். இவ்வியக்கத்தை, வரதராசன், புஷ்பராஜா, பத்மநாபா போன்றோர் ஆரம்பித்து நடத்தினர். அதன் வளர்ச்சி, மிக வேகமாக இளைஞர் மத்தியில் பரவியதனாலும் அரசியல்வாதிகளான, தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் தலைமைக்கு ஆபத்து வரும் நிலை (அதாவது இளைஞர்கள் தமிழர் கூட்டணித் தலைமையைத் தூக்கியெறிதல்) தோன்றியதாலும், அரசியல்வாதிகள் சூழ்ச்சியினாலும், தந்திரத்தாலும். இளைஞர் மத்தியில் பிரச்சினையைத் தோற்றுவித்து, கோஷ்டி பிரிவுச் செய்து, அதன் தலைமைக்குத் தம் ஆதரவாளர்களான சேனாதிராஜா, கவிஞர் காசி ஆனந்தன் போன்றோரை நியமித்து, அவ்வியக்கத்தைத் தம் கைக்குள் அடக்கிக் கொண்டு அதனைத் தமிழர் கூட்டணியின் இளைஞர் பிரிவாக மாற்றினர். ஆனால், ஈழவரின் பிரச்சினைக்குத் தீர்வினை, சரியான வழியையும். கருத்தையும். போராட்ட உணர்வையும் பெற்ற முற்போக்கான எண்ணங் கொண்ட இளைஞர்கள், தமிழ் இளைஞர் பேரவையிலின்றும் விலகி, "தமிழீழ விடுதலை இயக்கம்" என்னும் அமைப்பைத் தோற்றுவித்தனர். இது ஈழவரின் விடுதலைக்கான முழுமையான கருத்துக்களையும் வழிகளையும் அமைப்பாகக் கொண்டு தோன்றாவிட்டாலும், அந்த நேரத்தில், அதாவது 1975ஆம் ஆண்டில் அதுவே சரியான விடுதலை இயக்கமாக இயங்கிக் கொண்டிருந்தது. இதன் வளர்ச்சி மிக வேகமாக, ஆனால் ஆழமாக, ஈழவர் மத்தியில் அமைந்தது. ஈழவரின் பிரச்சினைக்குப் புது விதமான அணுகுமுறையையும், புதுமையான கருத்துக்களையும், வேகமான இயங்கு

படிப்பகம்

www.padippakam.com



முறையையும் கொண்டு இயங்கிக்கொண்டிருந்ததால் இளைஞரின் ஈர்ப்பை அதிகமாகப் பெற்றிருந்தது. இதன் வளர்ச்சி, தமிழர் கூட்டணியின் தலைமையைத் தவிடு பொடியாக்கிக் கொண்டிருந்தது. ஆனால் இதுவும் தொடர்ந்து நீடிக்க முடியவில்லை. காரணம், இவர்கள் செயல்முறையில் இறங்கியதும், அச் 'செயல்' தோல்வியடைந்தது. 'அதிவேகமான இயங்குமுறையும்'' இவர்கள் இயக்கத்தைக் குலையச் செய்தது. இவ்வியக்கத்தை, வரதராஜன், புஸ்பராஜா, முத்துக்குமாரசாமி, நங்க மகேந்திரன், சந்திரமோகன் போன்ற உணர்வு மிக்க இளைஞர்கள் ஆரம்பித்து இயக்கினர்.

இந்த இயக்கங்களின் வளர்ச்சியை உற்று நோக்கினால், ஈழவரின் போராட்ட வளர்ச்சியை நன்கு உணர முடியும். இவ்வியக்கங்கள், ஈழவருக்கு, நிறைந்த அனுபவங்களைப் பெற்றுக் கொடுத்துள்ளன. அதன் அறுவடையாக, ஈழவரின் விடுதலைக்கு, விஞ்ஞான ரீதியான அணுகுமுறையுடன்— ஆராய்வுடன் கூடிய, சரியான வழியையும், தலைமையையும், போராட்ட முறைமையையும், கருத்துகளையும் கொண்ட இயக்கத்தை அமைத்து விட்டார்களா? என்பதற்கு எதிர் காலம் பதில் சொல்லட்டும்.

பிரச்சினைகள் பற்றிய அணுகுமுறையின் வளர்ச்சி

ஈழவரின் பிரச்சினைகள் பற்றிய அணுகுமுறை எப்படிக் காலத்துக்குக் காலம் பரிணாமம் அடைந்தது என்பதைச் சற்று நோக்குவோம். 1945இல் இலங்கையின் நிர்வாகத்தில், நீதியில் சீர்திருத்தம் செய்ய வந்த சோல்பரிப் பிரபு என்பவர் இலங்கையில் பலரிடம் எப்படிப்பட்ட சீர்திருத்தம் வேண்டுமெனச் சாட்சியங்கள் பதிவு செய்தபோது, ''இலங்கைத் தமிழ் காங்கிரஸ்'' கட்சியைச் சேர்ந்த ஜீ. ஜீ. பொன்னம்பலம் என்பவர் ''ஐம்பதுக்கு ஐம்பது'' என்னும் கோரிக்கையை முன் வைத்து 36 மணிநேரத்திற்கு மேலாக சாட்சியமளித்தார். இதற்கு முன்பும் பல கால கட்டங்களில் பல்வேறு கோரிக்கைகள் முன் வைக்கப் பட்டாலும், அவை இது போன்று தாக்கமானதாக இருந்ததில்லை. ''50க்கு 50'' என்பது இலங்கைப் பாராளு மன்றத்துக்குப் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படும்போது பெரும்பான்மை இனமாகிய சிங்களவர் 50 பேர் தேர்வு செய்யப்பட்டால் தமிழர்களும் 50 பேர் தேர்வு செய்யப் படவேண்டும் என்னும் அடிப்படையில் இக்கோரிக்கை அமைந்தது. ஆனால் இது அதிகபட்சமானது, நியாயமற்றது எனக் கருதப்பட்டதால் தள்ளப்பட்டது.

1947 இல் காங்கிரசில் இருந்து விலகி, தமிழரசுக்கட்சி அமைத்தவர்கள் ஈழவரின் பிரச்சினையைச் ''சமஷ்டி

www.padippakam.com



அமைப்பே'' தீர்த்து வைக்கும், அதுவே சரியானது எனக் கோரினர்கள், தங்கள் கட்சியின் அடிப்படைக் கொள்கையாகவும் கொண்டார்கள். அதாவது, இலங்கை 5 சமஷ்டி அமைப்புகளாகப் பிரிக்கப்படவேண்டும். இதில் இரண்டு சமஷ்டி அமைப்புகள் தமிழ்ப் பிரதேசத்துக்கு வழங்கப்பட வேண்டும். நீதி, நிதி, பாதுகாப்பு தவிர்ந்த மற்றைய அதிகாரங்கள் இவ்வமைப்புகளுக்கு வழங்கப்படவேண்டும் எனத் தமது கொள்கைக்கான திட்டத்தை முன்வைத்தனர். நீண்டகாலம் வரைக்கும், இதனையே தமிழரசுக் கட்சியினர் தமது கொள்கையாகக் கொண்டிருந்தனர். இதனால் இவர்கள் கட்சியைச் ''சமஷ்டி கட்சி'' எனவே அரசியலாளர்கள் அழைத்தனர். இக் கொள்கையை முன்வைத்தே பல போராட்டங்களை இவர்கள் நடத்தினர். கிட்டத்தட்ட 1977ஆம் ஆண்டுவரை இதே கொள்கையைத்தான் இவர்கள் கொண்டிருந்தார்கள். ஆனால் 1947ஆம் ஆண்டுக்கும் 1977ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில், இவர்கள் இதைவிட்டு, குறைந்த அளவான கோரிக்கைகளையும் ஏற்றுக்கொள்ளும் நிலையில் தயாராய் இருந்தனர். உதாரணமாக, ''பண்டா—செல்வா'' ஒப்பந்தமென இவர்களும், இலங்கை அரசாங்கமும் 1957ஆம் ஆண்டு ஜூலை மாதம் செய்துகொண்ட இலங்கை அரசியலில் புகழ் பெற்ற ஒப்பந்தத்தில் ஈழவரின் உரிமைகளில் மிகக் குறைந்தளவு கோரிக்கைகளே இடம்பெற்றிருந்தன. அரசியல் நிர்பந்தங்கள் காரணமாக இவ்வொப்பந்தம் கிழிக்கப்பட்டது.

இந்தக் காலக்கட்டத்திலேயே ''ஈழத் தமிழர் ஒற்றுமை முன்னணி''யின் தலைவராக, சி. சுந்தரலிங்கம் என்பவர். தமிழர்கள் பிரிந்து செல்லவேண்டும், தனிநாடு அமைக்க வேண்டும் என்னும் கோரிக்கையை முன்வைத்தார். ஆனால் அக்காலக் கட்டத்தில் தமிழரசுக் கட்சியினது பிரச்சாரமும், கடுமையான எதிர்ப்பும் இக்கொள்கையை ஈழவர் மத்தியில் வலுவிழக்கச் செய்தன.

1972இல் தமிழரசுக் கட்சி ''தமிழர் கூட்டணி'' நிலையை அடைந்தபோது சில முன்னணித் தலைவர்களால் ''தனி நாடு'' பற்றி மேடைகளில் பேசப்பட்டது. கூட்டணி ''6 அம்சக் கோரிக்கை'' என்னும் சலுகைகளை முன்வைத்தது. ஆனால் ''இளைஞர் பேரவை'' என்னும் இளைஞர் அமைப்பு, தனிநாட்டுக் கொள்கையை முன்வைத்தது. இது இளைஞர் மத்தியிலும் மக்கள் மத்தியிலும் வேரூன்ற ஆரம்பித்ததால், கூட்டணியினரும் 1976ஆம் ஆண்டில், வட்டுக்கோட்டை என்னும் இடத்தில் நடைபெற்ற மாநாட்டின் தீர்மானத்தில் இக் கொள்கையை முன்வைத்தனர். இத்தீர்மானத்திலும், திடமான கொள்கையாக முன்வைக்காமல் ''தனிநாட்டுக்குத்

படிப்பகம்

www.padippakam.com



தள்ளப்படுகின்றோம்'' என்று தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ளனர். இவர்கள் இந்நிலைக்கு வருவதற்குமுன் பூர்வகுடி பேரவையில் இருந்து விலகிய இளைஞர்களால், வெற்றிகரமாக நடத்தப்பட்ட ''தமிழீழ விடுதலை இயக்கம்'' 1975ஆம் ஆண்டில், அதன் ஆரம்பத்தினபோதே, தனிநாடு என்னும் நிலையை விடுத்து ''விடுதலை'' என்னும் கொள்கையை முன் வைத்தது. தமிழர் கூட்டணியினரும், தமது இயக்கத்தின் பெயரைத் ''தமிழர் விடுதலைக் கூட்டணி'' எனப் பெயர் மாற்றம் செய்துள்ளனர். இன்று ஈழவரின் எண்ணமும் செயலும், ''விடுதலை'' என்னும் அடிப்படையிலேயே அமைந்துள்ளன. அத்துடன் இதுவரை வெறும் பொழி, இனம் என்ற ரீதியில் மட்டும் முன்வைக்கப்பட்ட கொள்கைகள், திட்டங்களோடு1975ஆம் ஆண்டுக் காலத்திற்குப் பின் வலுவான தத்துவத்தையும், கருத்தையும் இணைத்துள்ளார்கள் என்பது குறிப்பிடப்பட வேண்டியது. அதாவது, உலக அரங்கின் தறபோதைய நிலைகள், ஈழத்து இளைஞர்களின் சிந்தனையில் ஏற்படுத்திய தாக்கம்-மாற்றம், ''எந்த வனத்தில் வாழ்ந்தாலும்ஈழத் தமிழர் ஈழவரே,சொந்தம் என்பது உறுதியடா இது சோசலிசத்தின் கருதியடா'' என்று உரத்த குரலுடன் முழங்கிய வண்ணம், ''ஈழவருக்கான சமத்துவமான சமுதாயத்தை—ஈழத்தை அமைப்போம்'' என்ற கொள்கையுடன் கூடிய செயல்பாட்டினைக் காண உறுதியாக உள்ளது. இதற்குக் குறைந்த எந்த நிலையையும் ஈழவர் ஏற்கமாட்டார்கள் என்பதை எதிர்காலம் உலகுக்கு எடுத்துக்காட்டும்.

**போராட்ட முறையின் வளர்ச்சி**

ஈழவரின் பிரச்சினைக்கான தீர்வுவழிப் போராட்ட முறைமைகளை நோக்குமையில் தமிழரசுக் கட்சியினது நடவடிக்கைகளில் இருந்தே ஆரம்பிக்க வேண்டியுள்ளது. இவர்கள் போராட்ட வழிமுறைகளாக ''அகிம்சை முறையான'' காந்திய வழிமுறைகளையே கடைப்பிடித்துள்ளனர். ஆரம்பகாலங்களில் கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றுவதும், பத்திரிகைகளில் அறிக்கை விடுவது, மேடைகளில் முழங்குவது போன்ற வழிமுறைகளையே கையாண்டனர் 1956ஆம் ஆண்டு தனிச் சிங்களச் சட்டம் கொண்டு வரப்பட்டதால் அதனை எதிர்த்து, இலங்கைப் பாராளுமன்றத்துக்கு முன்பாக ''காலிமுகத் திடலில்'' ''சத்தியாக்கிரகம்'' மேற்கொண்டதன் மூலம், நடவடிக்கைகளில் இறங்கினர். சிங்களக் காவலர்களும், குண்டர்களும் தாக்கியபோது இரத்தம் வடிந்தபோதும் உறுதியுடன் இப்போராட்டத்தில் ஈடுபட்டனர். பின் 1957இல் வாகனங்களின் இலக்கத் தட்டில், சிங்கள ''ஸ்ரீ'' பொறிக்கப்பட்ட

படிப்பகம்

www.padippakam.com



போது சிங்கள 'ஸ்ரீ''யை அழிப்பதன் மூலமும், தொடர்ந்து சிங்களத்தை அழிப்பதன் மூலமும் தம் போராட்டத்தைத் தொடர்ந்தனர். 1962ஆம் ஆண்டில் ஈழம் முழுவதிலும் இவர்கள் சத்தியாக்கிரகம் மேற்கொண்டபோது, ஏறத்தாழ 56 நாட்கள் ஈழப் பகுதியில் அரசின் நிர்வாகம் முற்றாக நிலைநின்றது. அதனுடன் இவர்களால் தனித் "தபால் பகுதி" நடத்தப்பட்டு, தனி முத்திரையும் வெளியிடப்பட்டது. ஈழவர் அனைவரும் இப் போராட்டத்தில் பங்குபற்றினர். ஆனால் முன்னணித் தலைவர்கள் கைது செய்யப்பட்ட போது இப்போராட்டத்தை முழுமையாகக் கைவிடவேண்டிய நிலையேற்பட்டது

சரியாகத் திட்டமிட்டு வகுத்து, இப்போராட்டத்தை நடத்தியிருப்பார்களேயானால், இப்போராட்டம் வெற்றியடைந்திருக்கலாம். அகிம்சையின் மூலம் பிரச்சினைகளைத் தீர்க்கலாம் என்ற முடிவுக்கு உலகம்கூட வந்திருக்கலாம். ஆனால் இது படுதோல்வி அடைந்தது. இது வெற்றியடைந்திருந்தாலும் சரியானதா? நிலைத்திருக்குமா? என்பவை பிரச்சினைக்குரியன. அவை பற்றி ஆராய்வது இப்போது அவசியமற்றது.

"தமிழரசுக் கட்சி" தன்நிலை மாற்றி, "தமிழர் கூட்டணி"யானபோதும், அதிலிருந்து, "தமிழர் விடுதலைக் கூட்டணி"யானபோதும் கூட அவர்கள், இவ்வழிமுறையையே தம் போராட்ட முறையாக அறிவித்துள்ளனர், செயல்படுகின்றனர். மேலே குறிப்பிட்ட 1962ஆம் ஆண்டின் சத்தியாக்கிரகத்தின் பின் அதையொத்த போராட்டமோ, மிகப் பெரிய அளவான வேறு போராட்டங்களோ ஏதுவும் அவர்களால் நடத்தப்படவில்லை. காலத்துக்குக்காலம் பிரச்சினை வரும்போது, "இதோ போராட்டம் தொடங்குகிறோம்" எனப் பயமுறுத்துவது, "இதோ போராட்டம்" என அடையாளத்துக்கு எங்காவது மூலையில் ஒரு நடவடிக்கையாக உண்ணாவிரதம் இருப்பது அல்லது அமைதியாக ஊர்வலம்போவது, அல்லது சட்டத்திற்குட்பட்ட சட்ட மறுப்புச் செய்வது போன்றவற்றில் ஈடுபடுவது, கூட்டம் கூட்டிக் கண்டிப்பது போன்றவற்றிலேயே ஈடுபட்டு வருகின்றனர்.

1970ஆம் ஆண்டின் பின் "மாணவர் பேரவை" என்னும் இளைஞர் இயக்கத்தின் தோற்றம் குறிப்பாக "சிவகுமாரன்" என்னும் ஓர் இளைஞனின் மூலம், போராட்ட முறையே மாற்றியமைக்கப்படுகின்றது. ஆயுதம் எடுத்துப் போராடுவது என்னும் முறை ஈழவருக்குச் சிவகுமாரனால் அறிமுகம் செய்து வைக்கப்படுகின்றது. ஒரு சிங்கள அமைச்சர் ஈழப் பகுதிக்கு விஜயம் செய்தபோது, "உரும்பிராய்" என்னும்

படிப்பகம்

இடத்தில், காருக்கு வெடி குண்டு வைத்ததன் மூலம், ஈழத்தின் எதிர்ப்பு வெடிச் சத்தம் மூலம் அறிவிக்கப் படுகின்றது. அதைத் தொடர்ந்து சிங்கள ஆட்சியினரை ஆதரித்த, ஆட்சியின் ஏவலாள் போல் பணிபுரிந்த, ஈழவரின் பிரச்சினையை மறுத்துரைத்த ஒருவரின் கார் வெடி வைத்து தாக்கப்பட்டது. இவற்றைத் தொடர்ந்து ஈழத்தில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் வன்முறைப் போராட்டம் வளர்ச்சியுறுகின்றது. தனி மனித ரீதியில் செயல்பட்ட இம்முறைப் போராட்டம் படிப்படியாகக் குழு முறையில் வளர்ச்சி அடையத் தொடங்கியது. 1972இல் "குடியரசுப் பிரகடனம்" செய்த புதிய அரசியல் சட்டம் கொண்டு வரப்பட்ட மே 22 ஆம் நாள் ஈழ முழுவதும், பரவல் ரீதியான வன்முறை ஆரம்பமாகியது. அரசுப் பேருந்துகள் பெரும்பாலும்—முழுவதும், கற்களால் எறிந்து சேதப்படுத் தப்பட்டன, ஆட்சி அலுவலகங்கள் சிலவற்றின் மேல் கைக் குண்டுகள் வீசப்பட்டன. ஸ்ரீலங்கா தேசிய கொடிகள் அறுத்து எரிக்கப்பட்டன. இப்படிப் பல நிகழ்ச்சிகள். இவற்றைத் தொடர்ந்து புதிய அரசியல் சட்டத்தை ஆதரித்தார் என்பதற்காக, பாராளுமன்ற உறுப்பினரான தமிழர்—ஈழத்தில் ஒரு தொகுதியில் இருந்து தெரிவு செய்யப்பட்டவர்—ஒருவர் சுடப்பட்டார். ஆனால் மயிரிழையில் உயிர் தப்பினார். இன்னொரு கிராம சபைத் தலைவர் இதே போன்ற செயலைச் செய்தார் என்பதற்காக சுட்டுக் கொல்லப்பட்டார். இப்படியே நிகழ்ச்சிகள் தொடர்ந்த வண்ணம் இருந்தன. இன்றும் தொடருகின்றன. இவை காரணமாக, ஈழத்தின் இளைஞர்கள் — சந்தேகப் பட்டவர்கள் — எல்லாம் கைது செய்யப்படுகின்றனர். 1970ஆம் ஆண்டுக்குப் பின் இன்றுவரை அரசியல் காரணங் களுக்காக, ஈழத்து இளைஞர்கள் சிறையில் இல்லாத நாட்கள் இல்லையென்றே கூறலாம்.

1970இல் மந்திரி ஒருவரின் காருக்கு வெடிகுண்டு வைக்கப்படு கின்றது. அம்மந்திரியின் பெயர் சோமவீரசந்திரசிறி.

1971 இல் சிங்கள ஆட்சியை ஆதரித்த யாழ்ப்பாணத்தின் மேயர் "அல்பிரட் துரையப்பா"வின் கார் வெடி வைத்துத் தகர்க்கப்பட்டது.

1972இல் புதிய அரசியலமைப்புச் சட்டத்தைஆதரித்த வட் டுக்கோட்டை எம்.பி. ஆ. தியாகராசாவுக்குச் சூடு. நல்லூர் கிராம சபைத் தலைவர் குமாரகுலசிங்கம் சுட்டுக் கொலை.

1973 இல் சிங்கள மந்திரிமார் கலந்து கொண்ட கூட்டத்தில் மேடைக்கு வைப்பதற்கு "நேரக் குண்டு"(Time Bomb) செய்யப்பட்டது.

www.padippakam.com



1971இல் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாள் 9 பேர் கொல்லப்பட்டதால், அதன் காரணமான, போலீஸ் அதிகாரி சந்திரசேகரா என்பவருக்கு மூன்று தடவை, கைக் குண்டுகள் வீசப்பட்டன.

1974 இல் கோப்பாய் என்னும் இடத்தில் அரசாங்க வங்கி கொள்ளையிட முயற்சிக்கப்பட்டது. (இதுவே அரசியல் காரணத்துக்கான முதல் முயற்சி)

1975 இல் சென்னையில், இலங்கைத் தூதுவரகத்திலும், மகா போதி கட்டடத்திலும் வெடி வைக்கப்பட்டது.

1976 இல் மேயர் "துரையப்பா" சுட்டுக் கொல்லப்பட்டார். புத்தூர் அரசாங்க வங்கியில் 6 இலட்சம் ரூபாயும், நகையும் கொள்ளையடிக்கப்பட்டது. புலோலி அரசாங்க வங்கியில் 9 இலட்சம் கொள்ளையடிக்கப்பட்டது.

1977 இல் கருணாநிதி, சண்முகநாதன் என்னும் பெயர் கொண்ட மூன்று இரகசியப் பொலிசார் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

1978 இல் 6 இரகசியப் பொலிசார் சுட்டுக் கொல்லப்பட்டனர். புதிய அரசியலமைப்புச் சட்டம் அமலுக்குக் கொண்டு வரப்பட்ட செப்டம்பர் 7-ம் தேதி இலங்கை விமானம் ஒன்று வெடி வைத்து எரிக்கப்பட்டது. இதனை விடுதலை வேட்கையும் தமிழ் இளைஞர்கள் செய்திருக்கலாமென்று கருதப்படுகிறது.

நீங்கள் இப்போது போராட்ட முறையின் வளர்ச்சி முறைகளைக் கவனித்திருப்பீர்கள். ஆனால், எல்லாம், குழு முறையான, போராட்டங்களேயாகும். இன்றைய விடுதலைக்கான, சரியான இயக்க அமைப்புடன் கூடிய போராட்டம் நடத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். "பயங்கர வாதம்" (Terrorism) மட்டும் என்னும் அடிப்படையிலேயே போராட்டம் ஈழத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இது பயனற்றது, விடுதலைக்கு வழி வகுக்காது என்றும் சிந்தனை ஈழவரின் மத்தியில் வளர்ந்துள்ளது. இதன் வளர்ச்சியில், ஒழுங்கான இயக்க அமைப்போடு, சரியான போர் முறையோடு, வகுக்கப்பட்ட இராணுவ தந்திரங்களோடு உலக விடுதலைப் போராட்டங்கள் போல், விடுதலைப் போர் நடத்துவார்களா ? அல்லது இதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டு விட்டார்களா? காலம் உலகுக்கு உணர்த்தாமலா இருக்கப் போகின்றது.

வாழ்க ஈழம்! வெல்க ஈழவர் புரட்சி!

ஈழவர் இடர்தீர......!?

www.padippakam.com



அமையப்போகும் சமதர்ம ஈழத்தில்,
எங்கள் பங்கு எந்த அளவில் அமையும்?

படிப்பகம்

www.padippakam.com




அமையப் போகும் சமதர்ம ஈழத்தில்,
அன்றாடம் வாழ்க்கைக்காக போராடும் எமது
நிலை நீடிக்குமோ? ..........

www.padippakam.com

## ஆர்வமுள்ளோர் தொடர்பு கொள்க

இலங்கையில் சென்ற ஆண்டு ஆகஸ்டு மாதம் நடைபெற்ற இனக்கலவரத்தின்பின் தமிழக ஈழ நட்புறவுக் கழகம் தொடங்கப் பெற்றது.

பல நாளாக ஈழம்பற்றி ஒரு வெளியீட்டைக் கொண்டுவர வேண்டுமென்று எண்ணியிருந்தோம்.

சென்ற ஆண்டுக் கலவரத்தின்பின் இலங்கைத் தமிழர்பற்றி அறிந்து கொள்ள தமிழகத்திலுள்ள அனைவரிடமும் ஓர் ஆர்வம் எழுந்துள்ளது. அந்த ஆர்வத்துக்குத் துணை புரியும் வகையில இச் சிறு வெளியீட்டைக் கொண்டுவந்துள்ளோம்.

ஈழம்பற்றிய ஆர்வமுள்ளவர்கள் கற்றுப் பயன் பெற்றுத் துணைநிற்க வேண்டுகிறோம்.

7-9-1978 — தமிழக ஈழ நட்புறவுக் கழகம்

சென்னை. — சென்னை-600 018

---

நண்பர்கள் அச்சகம், சென்னை-600 018

படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்